செ.வெ. எண்: 741 நாள்: 10.12.2011

# செய்தி வெளியீடு

பொது மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பாக விளங்குவதோடு மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையவும் உறுதுணையாக, கடமை உணர்வுடன் பணியாற்றுபவர்கள் காவலர்கள். காவலர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும்; அவர்களுக்கான குடியிருப்புகள் அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகிலேயே இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

இந்த வகையில், தமிழகத்தில் தற்போது மொத்தம் ஒப்பளிக்கப்பட்டுள்ள 1,09,525 காவல் பணியாளர்களில் 47,520 பணியாளர்களுக்கு மட்டுமே குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டிருப்பதையும், 5,319 குடியிருப்புகள் தற்போது கட்டப்பட்டு வருவதையும் அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்த ஆண்டு 446 கோடியே 84 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக மேலும் 5,440 குடியிருப்புகள் கட்ட உத்தரவிட்டுள்ளார்கள்.

மேற்படி 5,440 குடியிருப்புகளில், 158 கோடியே 88 லட்சத்தில், 2,000 குடியிருப்புகள் கட்டுவதற்கான ஆணை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது மீதமுள்ள 3,440 குடியிருப்புகளை 287 கோடியே 95 லட்சத்து 41 ஆயிரம் ரூபாய் செலவில் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி 11 ஆய்வாளர்களுக்கான குடியிருப்புகளும், 21 சார் ஆய்வாளருக்கான குடியிருப்புகளும், 3,408 தலைமை காவலர் மற்றும் காவலர்களுக்கான குடியிருப்புகளும் கட்டப்பபடும். இந்த நடவடிக்கைகள் மூலம் காவல் துறை பணியாளர்களுக்கான குடியிருப்புத் தேவைகள் படிப்படியாக பூர்த்தி செய்யப்படும்.

இதே போன்று, காவலர் பணியில் உள்ள ஆபத்தினைக் கருத்தில் கொண்டு காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் நிலை வரை உள்ள காவல்துறை பணியாளர்கள், பணியில் இருக்கும்போது உயிரிழக்க ஏற்பட்டால், அவர்களது வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தற்போது வழங்கப்பட்டு வரும் காப்பீட்டுத் தொகையினை 1 லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை.
நாள்: 10.12.2011